திரு. மீ. கலியாணசுந்தரம் : பிரதம என்ஜினியரிடமிருந்து வந்திருக்கும் திட்டங்களின் விவரங்கள் என்னவென்று கூற முடியுமா? சென்னை நகருக்கு வழியில் உள்ள இதர முக்கிய நகரங்களுக்கும் குடிதண்ணீர் வழங்க திட்டமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

Reports of the District Development Councils

* 106 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state when copies of the Annual Reports of the District Development Councils for the year 1960–61 will be placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The reports received from the Collectors are under examination and they will be placed on the table of the House early.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 1960-61-ம் ஆண்டு அறிக்கை இன்னும் சபைக்கு வரவில்லையே. இவ்வளவு காலதாமதம் ஆகலாமா? இந்தச் சட்டத்தின் 11-வது விதிப்படி ஒவ்வொரு வருட அறிக்கையும் அடுத்த வருடம் சட்டசபை முன் வைக்கப்படவேண்டுமென்று இருக்கிறதே, அதன்படி துரிதமான நடவடிக்கைகள் எடுக்க முடியுமா?

9-00 a.m. **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறிப்பிட்ட சட்டத்தின் 14 (2) · (வி) பிரிவின்படி விதிகள் அமைக்கப்படவேண்டும். அந்த விதிப்படி எந்த பாரத்தில் இந்த அறிக்கை வரவேண்டுமென்று நிர்ணயிக்கப்படவேண்டும். விதிகள் அமைக்கப்படுவதில் தாமதமாயிற்று. இன்னும் அந்த விதிகள் பூர்த்தியாகவில்லை. இருந்தாலும் 1960-61-ம் ஆண்டு அறிக்கையை கலக்டர்கள் அனுப்பவேண்டுமென்று, அவர்களே ஏதாவது ஒரு பாரத்தில் அனுப்பவேண்டுமென்று தெரிவித்திருப்பதால் அது வரும், வந்த பின்னர் இந்த மன்றத்தில் வைக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் கலக்டர்களிடமிருந்து பதில் வந்து விட்டது என்று முதலில் சொன்னார்கள். இப்போது, கலக்டர்களுக்கு எந்தவித மான முறையில் பதில் அனுப்பவேண்டும் என்று கேட்டிருந்தோம். அதில் தாமதமானதினால் எந்த வித பாரத்திலாவது பதில் அனுப்பவேண்டும் என்று கேட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இதிலிருந்து அமைச்சர் அவர்களின் பதில் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. ஆகவே இதில் எது உண்மை என்று தெரியவில்லை. உண்மையிலேயே பதில் வந்து விட்டதா அல்லது வரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய பதிலில் முரண்பாடு ஒன்றும் இல்லை. கலக்டர்களிடமிருந்து பதில்கள் வந்து விட்டன. அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்ததும் சபையின் முன்னால் சமர்ப்பிக்கப்படும்.

MR. SPEAKER : Questions are over.